பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்.565 நாள்: 10.10.2026

**சேப்பாக்கம் மற்றும் பீட்டர்ஸ் சாலைப் பகுதிகளில் தெருவோரம் வசித்த 17 குடும்பங்கள் மீட்கப்பட்டு மெரினாவில் உள்ள குடும்பக் காப்பகத்தில் தற்காலிகத் தங்குமிடம் ஏற்பாடு செய்யப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சமுதாய வளர்ச்சிப் பிரிவு சார்பில், மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தல்கள், இணை ஆணையாளர் (பணிகள்) அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் வட்டார துணை ஆணையாளர் அவர்களின் மேற்பார்வையின்படி, 09.10.2026 அன்று சேப்பாக்கம் மற்றும் பீட்டர்ஸ் சாலைப் பகுதிகளில் தெருவோரம் வசித்து வந்த 17 குடும்பங்களை மீட்டு, அவர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மெரினா கடற்கரைப் பகுதியில் குடும்பங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள காப்பகத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், சேப்பாக்கம் மற்றும் பீட்டர்ஸ் சாலைப் பகுதிகளில் தெருவோரம் வசித்து வந்த 17 குடும்பங்களுக்குப் பாதுகாப்பான தற்காலிகத் தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்த நடவடிக்கையின்போது, குடும்பங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், அவர்களது உடைமைகளும் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டன. மேலும், குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தற்காலிகத் தங்குமிடம், மூன்று வேளை உணவு, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கையில் வட்டார துணை ஆணையாளர், மண்டல அலுவலர், தலைமைச் சமுதாய வளர்ச்சி அலுவலர், பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத் தலைவர், உதவிச் செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர், சமுதாய வளர்ச்சிப் பிரிவு அலுவலர்கள், மண்டல மற்றும் கோட்ட அளவிலான பணியாளர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தெருவோரம் வசிக்கும் குடும்பங்களின் பாதுகாப்பு, அடிப்படைத் தேவைகள் மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதிப்படுத்தும் நோக்கில், அவர்களுக்குத் தற்காலிகத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல், உரிய மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பாதுகாப்பான குடியிருப்பு வசதிகளைப் பெறுவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளைப் பெருநகர சென்னை மாநகராட்சியின் சமுதாய வளர்ச்சிப் பிரிவு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**